Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

WEDNESDAY, JUNE 16, 2021

புதன்கிழமை ஜூன் 16, 2021 | ஒளி: 07 கதிர்: 23 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | விலை ரூ.10

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தில்

# ‘தவறான விடயங்கள் உள்ளடக்கம்’

### தீர்வு காண பயங்கரவாத தடுப்பு விதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன

### தீர்மானத்தைத் திருத்தும் நோக்கில் அவதானிப்புகள் சமர்ப்பிப்பு




ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் இலங்கை தொடர்பில், 2021 ஜூன் 10ஆம் திகதின்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு வெளிநாட்டு அமைச்சு வருத்தம் தெரிவித்துள்ளது.

‘இலங்கையில் நிலைமை, குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்’ என்ற தலைப்பிலான இந்தத் தீர்மானமானது உண்மைக்கு மாறான கருத்துகளைக் கொண்டிருப்பதுடன், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியில் இலங்கை மேற்கொண்டுள்ள பன்முக முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இரண்டு பரீட்சைகளை நடத்துவதில் சிக்கல்



நாட்டில் பரவியிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் காரணமாக, பாடசாலைகள் யாவும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன. இந்நிலையில், 2021 கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றை நடத்துவதில் தாமதம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## ‘உள்ளக ஜனநாயகம் எமது கட்சியில் உள்ளது’

### எமது அரசாங்கம் பொறுமையானது; எவர் மீதும் உள்ள கோபத்தில் எரிபொருள் விலையை கூட்டவில்லை

மகேஸ்வரி விஜயனந்தன்

எம் கட்சியைத் தவிர வேறெந்தக் கட்சியிலும் உள்ளக ஜனநாயகம் இல்லையெனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, உள்ளக ஜனநாயகம் இன்மையால் இலங்கையின் பிரபல கட்சியொன்று அடியோடு காணாமலேயே சென்று விட்டது. அதுவே சிறந்த உதாரணமாகும் என்றார்.

தொடர்ச்சி P2

## ‘இறையாண்மைக்குள் தலையிடும் உரிமை எவருக்கும் இல்லை’

மகேஸ்வரி விஜயனந்தன்

இலங்கை அரசியலமைப்பானது, இலங்கை மக்களின் உரிமை மற்றும் இறையாண்மையாகும். இதில் தலையிடும் உரிமை இலங்கை மக்களைத் தவிர, வேறு எவருக்கும் இல்லை என அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான, கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகையை தற்காலிகமாக நீக்குமாறு, ஐரோப்பிய பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட யோசனை குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே,

தொடர்ச்சி P2

## ‘எரிபொருள் விலையேற்றத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது’



பொருளாதார ரீதியில் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள வேளையில் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்துள்ள தென்னை, கித்துள், பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ, மக்களின் தரப்பில் இருந்தே பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் செயற்பட்டுள்ளார் என்றார்.

தொடர்ச்சி P2



## பழுதும் பார்ப்போம்...

களுவாஞ்சிக்குடியில் இருந்து கல்முனைக்கு வெள்ளரிப்பழங்களை விற்பனை செய்வதற்காக எடுத்துச் சென்ற வியாபாரி ஒருவரின் மோட்டார் சைக்கிள், வீதியில் திடீரெனப் பழுதடைந்துள்ளது.

இதனையடுத்து, வீதியில் வியாபாரி செய்வதறியாது தடுமாறி நின்றிருந்தவேளை, பயணக் கட்டுப்பாட்டுகளைக் கண்காணிக்க அவ்வீதியால் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் உடனடியாகச் செயற்பட்டு, அவரது மோட்டார் சைக்கிளைப் பழுது பார்த்து அனுப்பிவைத்தனர்.

நிவாரணங்களை வழங்கக் கோரி

## வெலிஓயா மக்கள் வெளியில் இறங்கினர்

எஸ். கணேசன், எம். கிருஸ்ணா


பயணக் கட்டுப்பாட்டால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து, ஹட்டன்- வெலிஓயா தோட்ட மக்கள், நேற்று (15) கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி P2



எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின்

## இலங்கைப் பிரதிநிதியை கைது செய்ய ஆலோசனை



எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் இலங்கை பிரதிநிதியை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, சட்ட மா அதிபர், குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த இலங்கை பிரதிநிதியை கைது செய்வதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசேட குழுவொன்று, விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## இலங்கை அகதிக் குடும்பத்தை விடுவித்தது அவுஸ்திரேலியா

முழுச் செய்தி P8


## நகர சபைத் தலைவருக்கு பொலிஸ் பிணை

க.அகரன்

பொலிஸில் சரணடைந்ததன் பின்னர், கைது செய்யப்பட்ட வவுனியா நகர சபைத் தலைவர் இ.கௌதமன், பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலுள்ள வாடி வீடு வளாகத்துக்கு அண்மையில் விஜயம் செய்த நகர சபைத் தலைவர், அதற்கு சீல் வைத்திருந்தார். இதன்போது அங்கு கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியருடன் தலைவர் முரண்பட்டதாக குற்றஞ்சாட்டி, அவருக்கெதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2





## த.தே.கூ- ஜனாதிபதி சந்திப்பு ஒத்திவைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று, இன்று (16) மாலை இடம்பெறவுள்ளதென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அச்சந்திப்பு நடைபெறாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றிரவு வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு, இன்று (16) மாலை 4 மணியளவில் இடம்பெறுமென கூட்டமைப்பின் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்..

தொடர்ச்சி P2

## ‘21, பயணத்தடை நீக்கத்தை முன்னேற்றமே தீர்மானிக்கும்’

மகேஸ்வரி விஜயனந்தன்

21ஆம் திகதி வரையிலும் நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுபாடுகளை நீக்குவதா, இல்லையா என்பது தொடர்பான தீர்மானம், 19, 20ஆம் திகதிகளில் காணப்படும்

தொடர்ச்சி P2



அச்சத்தால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட

## சுகாதார தரப்பினரின் ஆடைகள்

என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை-பனாவத்த பிரதேசத்திலிருந்து நவட்ட பிரதேசத்துக்கு, ஓட்டோவொன்றில் பாதுகாப்பற்ற முறையில் கொண்டு செல்லப்பட்ட சுகாதாரப் பிரிவினர் அணியும் ஆடைகள் ஒரு தொகை, யட்டியாந்தோட்டை சுகாதார வைத்திய அலுவலக அதிகாரிகளால், யட்டியாந்தோட்டை நகரில் நேற்று (15) தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘தவறான விடயங்கள் உள்ளடக்கம்’

இலங்கை மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்களுக்குத் தீர்வு காண்பதற்காக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் விதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என இலங்கை அரசாங்கம் ஆரம்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது என்றும் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில், 2019ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்களால் பல ஐரோப்பிய ஒன்றியப் பிரஜைகள் உட்பட கணிசமான உயிரிழப்புகள் ஏற்பட்டமை நினைவு கூரப்படுகின்றது எனவும் நினைவுறுத்தியுள்ளது.

இருதரப்பு உறவுகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி, வெளிநாட்டு அமைச்சின் மூலமாக, ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு வழக்கமான, துடிப்பான, நல்லுறவு உரையாடலை, இலங்கை அரசாங்கம் பேணி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பிரஸ்ஸல்ஸில் உள்ள இலங்கை தூதரகத்தினூடாக ஐரோப்பிய ஆணைக்குழு, ஐரோப்பிய சபை, ஐரோப்பிய பாராளுமன்றம் ஆகியவற்றுடன் ஆக்கபூர்வமான உரையாடலை, அரசாங்கம் பேணி வருவதுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள், கொழும்பைத் தளமாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்களுடன் அரசாங்கத்தின் சிரேஷ்ட இடைத்தரகர்களின் ஈடுபாடுகளின் காரணமாக இந்தக் கலந்துரையாடல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையின் ஓர் அங்கமாக, 27 முக்கிய சர்வதேச சாசனங்களுக்கு இணங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி + ஐ மீளாய்வு செய்வது குறித்து, ஐரோப்பிய ஆணைக்குழுவுடன் இலங்கை தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றது என்றும் வெளிநாட்டு அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டுக்கான ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி + கண்காணிப்பு செயன்முறையின் மூன்றாம் சுற்று மதிப்பாய்வு நடைபெற்று வருகின்றது.

பரந்த அளவிலான ஒத்துழைப்புத் தொடர்பான இலங்கையின்முன்னேற்றம் குறித்து வருடாந்த ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை கூட்டு ஆணைக்குழுவில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை விளக்கமளித்ததுடன், இதன் 23ஆவது அமர்வு 2021 ஜனவரியில் கூட்டப்பட்டது. கூட்டு ஆணைக்குழுவின் கீழ் செயற்படும் சம்பந்தப்பட்ட செயற்குழுக்கள் மற்றும் குழுக்கள் மூலம் மேலதிக புதுப்பிப்புகள் வழங்கப்படுகின்றன.

தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் குறித்து, திருத்தம் செய்யும் நோக்கில் பின்வரும் அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சு விரும்புகின்றது.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இத்தகைய நடவடிக்கைகள் சிறுபான்மையினர் உட்பட அதன் அனைத்து குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான அரசியலமைப்பு ஆணை மற்றும் சர்வதேசக் கடமைகளுக்கு அமைவாகவே இலங்கையின் அரசியலமைப்பின் பிரிவுகள் உள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விதிகளை மறுபரிசீலனை செய்வதற்கான செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சூழலில், தற்போதுள்ள சட்டங்களை ஆய்வு செய்வதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் ஓர் அமைச்சரவை துணைக்குழுவை நியமிப்பதற்கான செயன்முறையொன்று செயற்பாட்டில் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ளலாம். இந்த முயற்சியை நோக்கி, ஏனைய அதிகார வரம்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சிறந்த நடைமுறைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல்கள் குறித்து விசாரணை ஆணைக்குழு அளித்துள்ள பரிந்துரைகளின் பிரகாரம் அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படுவதாக கூறப்பட்டுள்ளமை குறித்தும் இலங்கையில் முஸ்லிம்கள் அல்லது ஏனைய சிறுபான்மையின குழுக்களை தடுத்துவைப்பதற்கும் இச்சட்டம் முறைக்கேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற கூற்றை இலங்கை நிராகரிக்கிறது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுகாதார தரப்பினரின் ஆடைகள்

இது தொடர்பில் ஆராய்ந்த போது, சுகாதாரத் தரப்பினர் அணியும் ஆடைகளைத் தைக்கும் நிலையத்தைச் சேர்ந்த இருவர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதுடன், மேலும் குறித்த ஆடைகளைக் கொண்டு வந்தவர், அவரது மனைவி ஆகியோர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதால் அவர்களால் கொண்டுவரப்பட்ட ஆடைகளைத் தீயிட்டுக் கொளுத்தியதாகவும், மேலும் இவ்வாறு ஆடைகளைத் தயாரிக்கும் 13 நிலையங்கள் தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## ‘இறையாண்மைக்குள் தலையிடும் உரிமை எவருக்கும் இல்லை’

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

“ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையானது, இலங்கையின் ஆடைத் தொழில் மற்றும் விசேடமாக இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுடன் நேரடியாகத் தொடர்புடையது என தெரிவித்த அவர், சில விடயங்களில் உதாரணமாக ஆடைத் தொழிற்சாலைகளில் ஏதேனும் தொழிலாளர் சட்டங்கள் மீறப்படுவதாக இருந்தால் அல்லது ஆடை உற்பத்தி ஐரோப்பிய ஒன்றியத்தின் தரத்துக்கு ஏற்றதாக இல்லாவிட்டால், இலங்கை தொடர்பில், ஐரோப்பிய ஒன்றியத்தின் கவலைகள் நியாயப்படுத்தப்பட்டு புரிந்துகொள்ள முடியும்” என்றார்.

ஆனால், ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள யோசனை தொடர்பில் எந்தவொரு நியாயத்தையும் உணரமுடியவில்லை எனத் தெரிவித்த அவர், நாம் சுயாதீனமான நாடு என்பதுடன், அரசியலமைப்புக்கு அமையவே நாடு நிர்வகிக்கப்படும். அந்த அரசியலமைப்பு மக்கள் இறையாண்மைக்கு கீழேயே செயற்படுத்தப்படுகின்றது. மக்கள் இறையாண்மை சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய துறைகளில் செயற்படுத்துகின்றது என்றார்.

உலகில் ஏதாவது ஒரு நிறுவனம் எமக்கு சில சலுகைகளை வழங்குகிறது என்றால், அந்தச் சலுகையை வழங்கும் நிறுவனம் அந்தச் சலுகை குறித்த ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் கதைத்தால் உங்களுக்கு கதைப்பதற்கு உரிமையுள்ளது என இரு கைகளையும் உயர்த்த முடியும். இது தொடர்பில் கதைக்க அவர்களுக்கு பூரண உரிமையுள்ளது. ஆனால், மற்றொரு சுயாதீன நாடொன்றின் சுயாதீனத்துக்கு சவால் விடுத்து அரசியலமைப்பிலுள்ள நிபந்தனைகளை மாற்றுமாறு கோர அவர்களுக்கு என்ன உரிமை உள்ளது என வினவினார்.

## நகர சபைத் தலைவருக்கு...

இதனையடுத்து, நகர சபை தலைவர் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று (15) விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார். அங்கு சென்றதன் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டார். அதன் பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

## ‘21, பயணத்தடை நீக்கத்தை முன்னேற்றமே தீர்மானிக்கும்’

முன்னேற்றங்களுக்கு அமையவே தீர்மானிக்கப்படுமென தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, எமது எதிர்பார்ப்பு நாட்டை திறக்க வேண்டும் என்பதாகும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

“எமது எதிர்பார்ப்பு நாட்டை முழு மையாகத் திறக்க வேண்டும் என்பதாகும். அந்த எதிர்பார்ப்பு உண்மையுடன் முரண்படுவதால், அந்த உண்மை அடுத்து வரும் சில தினங்களில் நேர்மறையாக மாறினால், சாதகமாக சிந்திக்க முடியாமல் போய்விடும். எனினும், அவ்வாறு இல்லையென்றால் அதற்கேற்ப ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும்” என்றார்.

இவ்வாறான நேரத்தில் முடிவுகளை எடுக்கும் போது நிலைமை தீவிரமாக இருந்தால், முன்பு எடுத்த தீர்மானம் தவறாக மாறிவிடும். தற்போது எடுக்கப்படும் சில தீர்மானங்கள் சிக்கலாக அமைவதாக குற்றஞ்சுமத்தப்பட்டாலும் முழுஉலகமும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. கடந்த காலங்களில் கொரோனாவை வெற்றிகரமாக எதிர்கொண்ட பல நாடுகள் கூட இப்போது எதிர்பாராத வழிகளில் புதிய மாறுபாடுகளை எதிர்கொள்வதில் தோல்வியைச் சந்தித்துள்ளன என்றார்.

## த.தே.கூ- ஜனாதிபதி சந்திப்பு ஒத்திவைப்பு

‘புதிய அரசியலமைப்புக்கான யோசனைகளை 2020 டிசெம்பர் மாதம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்பிவைத்தது. அதன்பின்னர், 2021 பெப்ரவரியில், நிபுணர் குழுவை சந்தித்தது. இதை முன்கொண்டு செல்வது சம்பந்தமாகவே ஜனாதிபதியுடனான இன்றைய சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், சந்திப்பு தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான சந்திப்பொன்று நடைபெற்றிருக்குமாயின் ஜனாதிபதிக்கும் த.தே.கூவுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது சந்திப்பாகவே அது அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘எரிபொருள் விலையேற்றத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது’

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் அலுவலகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள வேளையில் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாது. எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக மீன்பிடி கைத்தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்” என்றும் தெரிவித்த அவர், ஆகவே, விலையேற்றம் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். இவ்விடயம் குறித்த ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

“எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் வெளியிட்ட அறிக்கை குறித்து மாறுப்பட்ட பல கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன. எரிபொருள் விலையேற்றத்தால் பாதிக்கப்படும் மக்களின் நிலையை அறிந்தே அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதனை அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடு எனக் கருத முடியாது. கருத்துச் சுதந்திரம் அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளது” என்றார்.

“பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோரின் மாறுப்பட்ட கருத்துகள் அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப்படுத்தாது என்றார்.

## இரண்டு பரீட்சைகளை நடத்துவதில் சிக்கல்

சுகாதாரத் தரப்பினர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி பரீட்சையை நடத்தும் தினம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, கொரோனா தொற்று நிலைமை காரணமாக 2020 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சாதாரணதர பரீட்சையின் செயன்முறை பரீட்சைகளை நடத்தும் தீர்மானம் தொடர்பில் இன்று 16) விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாகாண கல்விப் பணிப்பாளர்கள், அழகியல் துறைசார் பணிப்பாளர்கள், பரீட்சைகள் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

இதனிடையே, 2020 க.பொ.த உயர்தர பரீட்சை வினாத்தாள் மீள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கையை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## ‘உள்ளக ஜனநாயகம் எமது கட்சியில் உள்ளது’

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எமது அரசாங்கம் பொறுமையான அரசாங்கமாகும். எனவே, எவர் மீதும் உள்ள கோபத்தில் எரிபொருள் விலையை அதிகரிக்கவில்லை. இந்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் முகாமைத்துவம் செய்யும் போது, இவ்வாறு விலையேற்றம் அவசியமாகும் என்றார்.

சில தீர்மானங்கள் எம்மை மகிழ்ச்சிப்படுத்தாத தீர்ப்பாக அமைய முடியும். சில நேரங்களில் அசௌகரியமான தீர்மானங்களை எடுக்க நேரிடும். அந்த அசௌகரியமான தீர்மானமாகவே தான் இதனை கருதுகிறேன் என்றார்.

இதன் பொறுப்பை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பொறுப்பேற்ற பின்னர், மக்களிடம் ஏற்படும் அபிப்பிராயங்களுக்கு செவிசாயக்க வேண்டும்.

> **11 கட்சிகள் இணைந்து ஒரு குடையின் கீழ் செயற்படும் போது, அவர்களின் அபிப்பிராயங்களை முன்வைக்கும்போது, அவர்களது மனம் கோணாத வகையில் தீர்மானங்களை முன்னெடுப்பதே உள்ளக வேலைத்திட்டமாகும்**

ஆனால், அந்த உள்ளக ஜனநாயகத்தில் சில எல்லைகளை நாம் வரையறுத்துக்கொள்ள வேண்டும். சில நேரங்களில் எல்லை மீறப்படுமானால் நாம் கட்சி என்ற ரீதியில் ஒன்றிணைந்து கலந்துரையாட வேண்டுமே தவிர, வீதிக்கு இறங்கி அது குறித்து கலந்துரையாடக் கூடாது.

“11 கட்சிகள் இணைந்து ஒரு குடையின் கீழ் செயற்படும் போது, அவர்களின் அபிப்பிராயங்களை முன்வைக்கும்போது, அவர்களது மனம் கோணாத வகையில் தீர்மானங்களை முன்னெடுப்பதே உள்ளக வேலைத்திட்டமாகும்” என்றார்.

## வெலிஓயா மக்கள் வெளியில் இறங்கினர்

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் ஈடுபட்ட இம்மக்கள், தோட்ட முகாமையாளர், பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்தும் அதிருப்தி வெளியிட்டனர்.

மேலும், இத்தோட்டம் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்த 1 மாத காலப்பகுதியிலும் தமக்கு எவ்வித நிவாரணங்களோ, 5,000 ரூபாய் கொடுப்பனவோ வழங்கப்படவில்லை என இம்மக்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், அத்தியாவசிய பொருள் கொள்வனவுக்காக நகர் பகுதிகளுக்குச் செல்ல முடியாத இம்மக்கள், தோட்டத்திலுள்ள கூட்டுறவு நிலையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்தாலும் அங்கு அதிக விலைக்கு பொருள்கள் கொள்வனவு செய்யப்படுவதாகவும், எனவே கூட்டுறவு நிலையத்திலாவது குறைந்த விலைக்கு பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## இலங்கைப் பிரதிநிதியை கைது செய்ய ஆலோசனை

சந்தேகநபரின் அலுவலகம் மற்றும் வீடு ஆகியன சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் அப்பகுதிகளில் இருக்கவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

கப்பலின் இலங்கைக்கான பிரதிநிதியை கைது செய்வதற்கு சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, கப்பல் தீப்பற்றியதால் உயிரிழந்ததாகக் கூறப்படும் கடலாமைகள், டொல்பின்கள் ஆகியவற்றின் உடற்கூற்று பரிசோதனைகளை முன்னெடுத்த வைத்தியரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> **உயிரிழந்த கடலாமைகள், டொல்பின்கள் ஆகியவற்றின் உடற்கூற்று பரிசோதனைகளை முன்னெடுத்த வைத்தியரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது**

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் குழுவினரால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரசாயன திணைக்கள பகுப்பாய்வாளரின் அறிக்கை வெளியானதன் பின்னரே உயிரினங்களின் மரணங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



# நியமனம்

சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி மேனகா மூக்காண்டி, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரியாகவும் பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான மேனகா மூக்காண்டி, இலங்கை இதழியல் கல்லூரியில், துறைசார் கல்வியைக் கற்றவராவார்.

15 வருட கால தனது ஊடக வாழ்வில் ஊடகவியலாளராகவும் செய்தி ஆசிரியராகவும் திறம்படக் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரியாகவும் பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்படுவதற்கு முன்னர், அவர், 'தமிழ்மிரர்' பத்திரிகையின் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆசிரியர் குறிப்பு: 'தமிழ்மிரர்' ஆசிரியர் பீட குழாமின் முன்னாள் உறுப்பினர் என்றவகையில், அவருடைய பணியைத் திறம்படச் செய்வதற்கு, எமது குழாமின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதுடன், மகிழ்ச்சியடைக்கின்றோம்)

எப்போதென்று தெரியாது

# 'சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கும்'

## மக்களின் கஷ்டங்கள் எமக்குப் புரியும்



கவலையாக இருந்தாலும், எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்கப்படும் என்பது உண்மை. ஆனால்,அது எப்போது நடக்கும் எனத் தனக்குத் தெரியாதெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அஜித் நிவாட் கப்ரால், மக்கள் சிரமத்தில் இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். மக்களின் கஷ்டங்கள் எமக்குப் புரியும். இவ்வாறான சூழ்நிலையிலேயே சிரமமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளின் விலையை அதிகரிக்காவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். கவலையாக இருந்தாலும் எரிபொருளின் விலை அதிகரிக்க வேண்டியுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட எரிபொருள் விலை சூத்திரம் தற்போதும் இருந்திருந்தால், எரிபொருளின் விலைகள் இன்னும் அதிகரித்திருக்கும். எரிபொருளின் விலை அதிகரிப்புடன் சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரிக்க உள்ளது. அதிக விலையை செலுத்தி எரிவாயுவைக் கொள்வனவு செய்து, குறைந்த விலைக்கு வழங்க முடியாது. ஆனால், இதனையே எரிவாயு நிறுவனங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன.

எனவே, சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படுமென்பது உண்மை. ஆனால், அது எப்போது என எனக்குத் தெரியாதெனவும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

தெஹிவளையில் சொகுசு மாடி வீட்டில்

# காலாவதியான மருந்துப் பொருட்கள் மீட்பு

தெஹிவளை, நெதிமால ரபர்வத்த வீதியிலுள்ள சொகுசு மாடி வீடொன்றிலிருந்து காலாவதியான பெருந்தொகையான மருந்துப் பொருள்களை தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தெஹிவளை வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காலாவதியான மருந்துப் பொருள்களை, போலியான லேபல்களைத் தயாரித்து மீண்டும் அவற்றை சந்தைகளுக்கு விநியோகித்து வந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காலாவதியான மருந்துகள் சந்தைகளில் காணப்படுமாக இருந்தால், அவற்றை அகற்றுவதற்கு தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் அதிகாரிகள் இருவர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தெஹிவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில், தேசிய மருந்துகளை ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் அதிகாரிகள் இம்மாதம் 12ஆம் திகதி இந்த வீட்டை சுற்றிவளைத்திருந்ததமைக் குறிப்பிடத்தக்கது.

மனிதன் – யானை மோதல்;

# ஆறு மாதத்தில் 55 பேர் உயிரிழப்பு



நாட்டில் மனிதன் - யானை மோதல்களால் இந்த வருடத்தில் இதுவரையிலான காலப் பகுதியில் மாத்திரம், 55 பேர் உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மனிதன்-யானை மோதல்களால் கடந்த 6 மாதங்களில் மாத்திரம் 158 யானைகள் உயிரிழந்துள்ளதோடு, 36 யானைகள் மின்சார வேலிகளாலும், 15 யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியும், 45 யானைகள் அறியப்படாத காரணங்களாலும் உயிரிழந்துள்ளதாகவும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

# 'சஜித்துடன் சென்றவர்கள் மீண்டும் ரணிலுடன் வந்தனர்'



ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்திக்குச் சென்ற மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 16 பேர், மீண்டும் ஐ.தே.கவில் இணைந்துள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கம்பஹா நகர சபையின் 10 உறுப்பினர்களும், கண்டி மாநகர சபையின் மூன்று உறுப்பினர்களும் உடபலாத்த பிரதேச சபையின் மூன்று உறுப்பினர்களுமே இவ்வாறு மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த கம்பளை நகர சபையின் உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் ஐ.தே.கவில் இணைந்துள்ளனர். இதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, இவர்கள் மேற்குறித்த உறுப்பினர்கள் அனைவரும் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ரங்கே பண்டார கூறியுள்ளார்.

**"கம்பஹா நகர சபையின் 10 உறுப்பினர்களும், கண்டி மாநகர சபையின் மூன்று உறுப்பினர்களும் உடபலாத்த பிரதேச சபையின் மூன்று உறுப்பினர்களுமே இவ்வாறு மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துள்ளனர்**

எரிபொருள்களின் விலைகளை

# கூட்டாமல் இருந்திருக்கலாம்



எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்காமல் இருந்திருக்கலாமெனத் தெரிவித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஆனாலும், நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு எரிபொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

காலியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். எதிர்காலத்தில் எரிபொருளின் விலையைக் குறைக்க சந்தர்ப்பம் கிடைக்குமாக இருந்தால், முதலாவது சந்தர்ப்பத்திலேயே எரிபொருள்களின் விலை குறைக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடங்களாக எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை எனவும் தெரிவித்த அமைச்சர் நாமல், எரிபொருள் விலை அதிகரிக்க எடுக்கப்பட்ட தீர்மானம் விரும்பி எடுக்கப்பட்டதல்ல. தேசிய பாதுகாப்புக்காகவும் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, வாகனங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் சபாநாயகருடன் ஆளும், எதிர்க்கட்சியினர் கலந்துரையாட வேண்டும். வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அவசியமில்லை என்றால், அது தொடர்பில் இரு கட்சிகளும் சபாநாயகருக்குக் கோரிக்கை ஒன்றை விடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மாணவிகளுடன் நட்புடன் பழகி;

# போதைப்பொருள் வழங்கிய பெண்ணுடன் மூவர் கைது

## கடத்தல் முறியடிப்பு



லக்கலயில் உள்ள சந்தையொன்றுக்கு வந்திருந்த 15 வயதுடைய இரு மாணவிகளை ஏமாற்றி, அவர்களைக் கடத்திச் சென்ற இருவரையும், இந்த நபர்களுக்கு உதவி செய்த பெண்ணொருவரையும் லக்கல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

22, 23 வயதுடைய திருமணமான ஆண்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் பொலிஸார், இவர்கள் இருவரும் குறித்த மாணவியருடன் நண்பர்களாகப் பழகி, பின்னர் மாணவிகளுக்கு போதைப்பொருள்களையும் வழங்கி வந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 12ஆம் திகதி இரவில் வாகனங்களில் வந்த இரண்டு ஆண்களும் மாணவிகளை கடத்திச் சென்றிருந்த நிலையில், அவர்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

**"கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு திருமணங்கள் நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கும் பொலிஸார், இரு சந்தேகநபர்களுக்குமே பிள்ளைகளும் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்**

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு திருமணங்கள் நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கும் பொலிஸார், இரு சந்தேகநபர்களுக்குமே பிள்ளைகளும் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தில் மேலும் இரு ஆண்களும், ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை;

# 'நிரந்தரமற்ற ஊழியர்களை நிரந்தரமாக்குவேன்'

நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் கீழ், பல்வேறு அடிப்படைகளில் சேவையாற்றும் நிரந்தரமற்ற ஊழியர்களை, நிரந்தரமாக்குவதற்கான வேலைத்திட்டத்துக்கு எதிர்வரும் காலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படுமென நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், இந்த வேலைத்திட்டத்துக்காக சேவை, சம்பள ஆணைக்குழுவின் அனுமதி, திறைசேரியின் அனுமதியை பெற வேண்டுமெனவும் தெரிவிக்கும் அமைச்சர், எந்தவோர் ஊழியருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் இதனை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டு நாடு முழுவதிலும் அனைவருக்கும் குடிநீர் விநியோகிக்கும் பாரிய திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். இதற்காக பாரியளவிலான ஊழியர்கள் தேவை எனவும் தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இதற்காகப் புதிய ஊழியர்களை இணைத்துக் கொள்ளாது, ஏற்கெனவே ஐந்து வருடங்களுக்கு அதிகமாக சேவையாற்றும் ஊழியர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

**"2025ஆம் ஆண்டு நாடு முழுவதிலும் அனைவருக்கும் குடிநீர் விநியோகிக்கும் பாரிய திட்டத்தைச் செயற்படுத்த, பாரியளவிலான ஊழியர்கள் தேவை**

ஆடைத் தொழிற்சாலைகள் வழக்கு

# முடிவுக்கு வந்தது

## 20க்குப் பின்னர் தொழிற்சாலைகளை இயக்குமாறு உத்தரவு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

சுகாதாரத் தரப்பினக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றமாறும், கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கு, கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம், நேற்று (15) உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்த நீதிமன்றம், எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையின் பின்னர், தொழிற்சாலைகளை இயக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சியில் உள்ள விடியல், வானவில் ஆகிய ஆடைத் தொழிற்சாலைகளுக்கு எதிராக, கடந்த 10ஆம் திகதியன்று, கரைச்சி பிரதேச சபையாலும், பொதுமக்கள் சார்பாகவும், இருவேறு மனுக்கள் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அன்றைய தினமே, இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்த கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம், சுகாதாரத் தரப்பின் அறிக்கையை கோரி, ஜூன் 15ஆம் திகதி வரை விசாரணைகளை ஒத்திவைத்தது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை, மீண்டும், நேற்று (15) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நேற்று முன்தினம் (14) கரைச்சி பிரதேச சபைக்கு, குறித்த இரண்டு தொழிற்சாலை நிர்வாகங்களால், கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அதில், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடித்தும், தொற்று நோய் கட்டுப்படுத்தலை முறையாகப் பேணும் வகையிலும் தொழிற்சாலையை இயக்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமிடத்து, வழக்கை முடிவுக்கு கொண்டு வர முடியும்" என, பிரதேச சபை சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

அதற்கு இரு தரப்பும் இணக்கம் தெரிவித்தமைக்கு அமைவாக, வழக்கை முடிவுக்கு கொண்டு வருவதாக, நீதவான் தெரிவித்தார்.

இதேவேளை, மன்றில் ஆஜராகியிருந்த கரைச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, குறித்த



இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளினதும் நிலைவரம் தொடர்பிலும் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு தொழிற்சாலை நிர்வாகங்கள் ஒத்துழைப்பது இல்லை எனத் தெரிவித்தார்.

அதனைக் கவனத்தில் கொண்ட நீதவான், தொழிற்சாலைகளின் ஊழியர்களின் விவரம், குழுவாகப் பணி புரிவதால் குழுக்களின் விவரம் ஆகியவற்றை வழங்குமாறும் குழுக்களில் மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டால் அது தொடர்பிலான தகவலை வழங்குமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

மேலும், தொழிற்சாலைகளின் ஊழியர்கள் தங்கியுள்ள பகுதிகள், போக்குவரத்து முறைகள் உள்ளிட்ட தகவல்களை, சுகாதார வைத்திய அதிகாரிக்கு வழங்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதவான், குறித்த தகவல்களை உரிய முறையில் இரகசியம் பேணப்படும் வகையில், சுகாதார வைத்திய அதிகாரி முழுமையாக தனது பொறுப்பில் வைத்திருக்க வேண்டும் எனவும் கூறினார்.

மேலும், தொழிற்சாலை ஊழியர்களுக்கான அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறும் பரிசோதனையின் முடிவுகளைக் கொண்டு, பணியில் அமர்த்தக்கூடியவர்களை அழைத்து, ஞாயிற்றுக்கிழமையின் (20) பின்னர் தொழிற்சாலைகளை இயக்குமாறும், நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும் எனத் தெரிவித்த நீதவான், குறித்த வழக்கை முடிவுறுத்துவதாகவும் வழக்கின் தீர்மானத்துக்கு அமைவாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்களை, மன்றுக்கு எதிர்வரும் 23ஆம் திகதி அறிக்கையிடுமாறும், உத்தரவிட்டார்.



நாயாறு, நந்திக்கடல், காக்கைதீவு களப்புகள் புனரமைப்பு:

# அதிகாரிகளுக்கு டக்ளஸ் ஆலோசனை

நடராசா கிருஸ்ணகுமார்

நந்திக்கடல், நாயாறு களப்புகளின் புனரமைப்பு பணிகளை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் - காக்கைதீவு கடல் நீரேரியை தூர்வாருவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார்.

நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற களப்புகளைப் புனரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பாக நடைபெற்ற மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே, நக்டா, நாரா, கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றுக்கு டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

இதன்போது, முல்லைத்தீவு, நந்திக்கடலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள், ஏற்கெனவே வகுக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்த அதிகாரிகள், நந்திக்கடல் அபிவிருத்தித் திட்டம் குறித்து வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

வங்காலை கடற்கரையில்

# கரையொதுங்கிய கடலாமை

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலை கடற்கரையில் நேற்று (15) காலை, உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அண்மையில், இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தான பொருள்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருள்கள் , மன்னார் - வங்காலை கடற்கரை, சிலாபத்துறை கடற்கரையில் கரையொதுங்கின.

இந்த நிலையில், நேற்று (15), ஓடுகள் கடுமையாகச் சிதைவுற்ற நிலையில் கடலாமை ஒன்று உயிரிழந்துள்ள நிலையில், வங்காலை கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

கடந்த வாரம் சிலாபத்துறை கடற்கரையிலும் உயிரிழந்த நிலையில், கடலாமை ஒன்று கரை ஒதுங்கியிருந்தது.

இதேவேளை, வடக்கு, தெற்குக் கடற்கரைகளில் அண்மைக்காலமாக சுமார் 30க்கும் மேற்பட்ட கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துணுக்காயில்

# '205 ஏக்கருக்கு உரம் வேண்டும்'

நடராசா கிருஸ்ணகுமார், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 205 ஏக்கருக்கு, உரம் வழங்கப்பட வேண்டியுள்ளதாக, துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தற்போது தமது கமநல சேவை நிலையத்தில், உரம் முடிவடைந்து விட்டதாகவும் உரம் இன்னும் வரவில்லை எனவும் கூறினார்.

கல்விளான் விவசாயிகளுக்கும் உரம் வழங்கப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவித்த அவர், மொத்தமாக, 205 ஏக்கருக்கு உரம் வழங்க வேண்டியுள்ளதாகவும் உரம் வரும் வரையில் காத்திருப்பதாகவும் கூறினார்.

# தவிசாளர் உள்ளிட்ட

## 23 பேருக்கு பி.சி.ஆர்

டி.விஜித்தா

வலிகாமம் மேற்கு பிரதேச சபையில், நேற்று (15) 23 பேருக்கு, பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட 23 பேருக்கே, இவ்வாறு பி.சி. ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன் முடிவுகளின் அடிப்படையில் ஏனையோருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்காலில்

# வெடிபொருள் மீட்பு

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கடற்கரை பகுதியில், நேற்று (15) காலை, வெடிபொருளொன்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த வெடிபொருள் கரையொதுங்கியிருந்த நிலையில், அப்பகுதி மீனவர்களால் அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார், வெடிபொருளை மீட்டுள்ளனர்.

கடந்த காலப் போரின் போது, இந்த வெடிபொருள் கடலில் வீசப்பட்டு, தற்போது கடும் காற்றால் கரை ஒதுங்கியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.



மட்டக்களப்பு மாவட்டத்துக்கு

# புதிதாக நான்கு பொலிஸ் நிலையங்கள்

ஏ.எச்.ஏ. ஹூஸைன், எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் 4 பொலிஸ் நிலையங்கள் புதிதாக உருவாக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புணானை, சந்திவெளி, கொக்குவில், கர்பலா ஆகிய இடங்களிலேலே இந்தப் புதிய பொலிஸ் நிலையங்கள் இயங்கவுள்ளன.

இதற்கான அனுமதியை, பொலிஸ் மா அதிபர் வழங்கியதையடுத்து, புதிய பொலிஸ் நிலையங்களை அமைக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 பொலிஸ் நிலையங்கள் இயங்கிவருகின்றன.

அதற்கும் மேலதிகமாகவே இந்த நான்கு பொலிஸ் நிலையங்களும் பொது மக்களின் நன்மை கருதி, இம்மாத இறுதிக்குள் திறக்கப்பட்டு, பொலிஸ் சேவைகளைத் தொடரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் கீழ், புணானையில் தற்போது இயங்கி வரும் பொலிஸ் சோதனைச் சாவடி, புணானை பொலிஸ் நிலையமாகவும் ஏறாவூர் பொலிஸ் பிரிவின் கீழ் இயங்கி வரும் சந்திவெளி, கோரகல்லிமடு பொலிஸ் சோதனைச் சாவடி, சந்திவெளி பொலிஸ் நிலையமாகவும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவில் கொக்குவில் பொலிஸ் சோதனைச் சாவடியாக இயங்கிவரும் சோதனைச் சாவடி, கொக்குவில் பொலிஸ் நிலையமாகவும் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் இயங்கி வரும் கர்பலா பொலிஸ் சோதனைச் சாவடி, கர்பலா பிரதேச பொலிஸ் நிலையமாகவும் இயங்கவுள்ளன.

# சைக்கிளில் வந்து, மோட்டார் சைக்கிளில் சென்ற திருடன்

எச்.எம்.எம்.பர்ஸான்



சைக்கிள் ஒன்றில் வந்த நபரொருவர், ஓர் இடத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டு, அங்கிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ள-சம்பவமொன்று, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லாப் பிச்சை வீதியில் நேற்று முன்தினம் ((14) இரவு இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனையைச் சேர்ந்த நபரொருவரின் EP -BCV 8533 எனும் இலக்கத்தை உடைய கறுப்பு நிற பல்சர் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக, வாழைச்சேனை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைவிட்டுச் சென்றுள்ள சைக்கிளைக் கைப்பற்றியுள்ள வாழைச்சேனை பொலிஸார், மோட்டார் சைக்கிள் திருடனைத் தேடி வருகின்றனர்.



சட்டவிரோத மணல் அகழ்வு;

# மீனவர்களும் விவசாயிகளும் சமூக இடைவெளியில் எதிர்ப்பு

வா.கிருஸ்ணா

பயணக் கட்டுப்பாட்டு காலத்திலும், மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கித்துள் பகுதியில் வடிச்சல் ஆற்றை ஊடறுத்து உழவு இயந்திரம், கனரக வாகனங்கள் மூலம் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்து, கித்துள் வடிச்சல் ஆற்றுப் பகுதியில் சுமார் 30 மீனவர்களும் விவசாயிகளும் சமூக இடைவெளியைப் பேணி நேற்று (15) எதிர்ப்பு நடிவடிக்கையில் ஈடுபட்டனர்.

# கரையொதுங்கிய பாரிய சுறா மீன்

## மீனவர்களால் கடலில் விடப்பட்டது



திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி கடற்கரையோரப் பகுதியில் பாரிய சுறா மீன் ஒன்று, நேற்று முன்தினம் (14) மாலை கரையொதுங்கியதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய சுறா மீன், மீனவர்களால் பாதுகாப்பாக மீண்டும் கடலில் விடப்பட்டுள்ளது.

இந்தச் சுறா மீன், சுமார் 300 கிலோ கிராமுக்கும் மேற்பட்ட நிறையுடன், 04 அடி நீளம் கொண்டதாக இருந்ததாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண வானிலை மாற்றங்கள், கடல் கொந்தளிப்புக் காரணமாக இவ்வாறு சுறா மீன் கரையொதுங்கி உள்ளதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.



# மணல் அகழ்வு; நால்வர் கைது

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முந்தானை ஆற்றின் வடிச்சல் பகுதியில், அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர், நேற்று (15) கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின் கீழ், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர், நேற்று அதிகாலை 5 மணியளவில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கடத்தலுக்குப் பயன்படுத்திய 4 உழவு இயந்திரங்கள், மணல் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், உழவு இயந்திரங்கள், மணல் சகிதம் கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மீன் பிடிக்க

# ஆழ்கடலுக்கு சென்ற மீனவர்கள் எண்மர் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் இருந்து அனுமதியின்றி ஆழ் கடலில் இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 8 பேரை, நேற்று முன்தினம் (14) இரவு கடலில் வைத்து கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அத்துடன், மூன்று இயந்திரப் படகுகளையும் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் வழமைபோல ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கிடமாக கடலில் இயந்திரப் படகுகள் பயணித்தமையை அவதானித்து, அவற்றைப் பின் தொடர்ந்து இயந்திரப் படகுகளை வழிமறித்துச் சோதனையிட்டனர்.

இதன்போது, அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மட்டக்களப்பு, மாமாங்கப் பகுதியைச் சேர்ந்த 8 மீனவர்களையும் கடற்படையினர் கைதுசெய்தனர்.

அத்துடன், இயந்திரப் படகுகளையும் கல்லடி கடற்படை முகாமுக்குக் கொண்டுவந்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, மீன்பிடித் திணைக்களத்திடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.







மண்சரிவு எச்சரிக்கைக்கு மத்தியிலும்

# ‘வாழ்வதைத் தவிர, வேறு வழியில்லை’

## வேவல்கெட்டிய மக்களின் அவலம்

■ எம். மஹிந்தகுமார்

மண்சரிவு ஏற்படுமென தேசிய கட்டட ஆய்வு நிலையத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள குடியிருப்புகளிலேயே வாழும் அவல நிலைக்கு, இரத்தினபுரி - வேவல்கெட்டிய தோட்ட மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தின் ஹப்புகஸ்தென்ன, வேவல்கெட்டிய தோட்ட கீழ் பிரிவில் வசிக்கும் சுமார் 42 குடும்பங்கள், மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதால், அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு, தேசிய கட்டட ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டிலிருந்து 42 குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் மண்சரிவை எதிர்நோக்கி வரும் நிலையில், அவ்வப்போது இம்மக்கள் தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள தற்காலிக இடங்களில் தங்குவதுடன், மழைக் காலம் நின்ற பின்னர், மீண்டும் பழைய குடியிருப்புகளுக்கே திரும்பி விடுகின்றனர்.

கடந்த 5 வருடங்களாக இவ்வாறான பிரச்சினையைத் தொடர்ந்து சந்தித்து வரும் இம்மக்கள், தமக்கு நிரந்தரமான வீடுகளை அமைக்க இடமொன்றை ஒதுக்கித் தருமாறு, தோட்ட நிர்வாகத்திடம் பலமுறை கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இவர்களின் கோரிக்கைகளுக்கு இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை என வேவல்கெட்டிய தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தமக்கான நிரந்தர இடமொன்று கிடைக்கும் வரை பாரிய வெடிப்புகளுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்வதைத் தவிர, வேறு வழியில்லை என்றும் இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஜனாதிபதி செயலணியில் எஸ்.கே சந்திரசேகரம்

■ துவாரகஷன்



பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்பாளராக பிரிடோ நிறுவன செயற்றிட்ட இயக்குநர் தேசபிமானி தேசபந்து அகில இலங்கை சமாதான நீதவான் எஸ். கே. சந்திரசேகரம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பல வருடமாக நுவரெலியா மாவட்டத்தில் பிரிடோ நிறுவனத்தின் ஊடாகவும் ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளோடு இணைந்து, பெருந்தோட்ட மக்களின் உரிமைசார் விடயங்களிலும் மாணவர்களின் கல்வி அபிவிருத்திசார் பணிகளிலும் வினைதிறன் மிக்க சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரத்தினபுரி மாவட்டத்தில்

# சிறுவர், பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரிப்பு

■ ஏ.ஏ.எம். பாயிஸ்

இரத்தினபுரி மாவட்டத்தில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக, அம்மாவட்ட சிறுவர், மகளிர் நன்னடத்தைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 2019, 2020ஆம் ஆண்டுகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் 20 பெண்கள், சிறுவர் மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும், அவற்றில் 15 பெண்களும் 5 சிறுவர்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இம்மாவட்டத்தில் இடம்பெற்ற 416 குற்றச்செயல்களில் 145 பெண்களும் 25 சிறுவர்களுக்கும் எதிராக பாலியல் தொடர்பான குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 17 பொலிஸ் பிரிவுகளிலும் பெண்கள், சிறுவர் ஆகியோருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி நிறுவனத்தில் பலருக்கு தொற்று

■ சேஹ்ன் செனவிரத்ன

கொவிட்- 19 தடுப்பு சுகாதார சட்டதிட்டங்களை மீறி, கண்டி- மெதவல வீதியில் உள்ள வீடொன்றில் கல்வி நிறுவனமொன்றை நடத்திச் செல்லப்படுவதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, அந்நிறுவனம் கடந்த 3ஆம் திகதி சுற்றிவளைக்கப்பட்டு, அங்கிருந்த 58 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நேற்று முன்தினம் (14) பி.சி. ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவர்களுள் 31 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

பல வருடங்களாக உயர்தரம் அல்லது சாதாரண தரத்தில் சித்தியடையத் தவறும் மாணவர்களைக் குறித்த கல்வி நிலையத்தில் தங்க வைத்து, அவர்களுக்குக் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

பயணக் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்ட நிலையிலும் தொடர்ச்சியாக இந்தக் கல்வி நிறுவனம் செயற்பட்டமையால், அங்குள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில்

# தொழில் ஆணையாளருக்குக் கடிதம்




கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு வழங்கப்பட வேண்டுமென தொழில் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ள தோட்டத் தொழிலாளர் நிலையம், இது தொடர்பிலான கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

தொழில் ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே, தோட்டத் தொழிலாளர் நிலையம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், தொழிலாளர்கள் எவ்விதப் பாதுகாப்பு முறைகளுமின்றித் தொழில் செய்து வருகின்றமையை சுட்டிக்காட்டியுள்ள அந்நிலையம், தொழிலாளர் உள்ளிட்ட ஏனையோருக்கும் தடுப்பூசிகளை விரைவாக வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

> **தொழிலாளருக்கு தடுப்பூசிகளை விரைவாக வழங்குவதுடன் தொற்றுக் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையை வழங்க வேண்டும்**

அத்துடன், தொற்றுக் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையை வழங்கு வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாயை வழங்குவதில் பெருந்தோட்டக் கம்பனிகள் அநீதியான முறையில் நிபந்தனைகளை முன்வைக்கக் கூடாதெனவும் தோட்டத் தொழிலாளர் நிலையம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இதேவேளை, மேற்படிக் கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடலொன்றை தொழில் ஆணையாளர் பெற்றுத் தரவேண்டுமெனவும், இப்பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குறித்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# உரத்தை பதுக்கிய இருவர் கைது

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி- பல்லேபெத்த, கொலம்பகேஆர ஆகிய பிரதேசங்களில் உரத்தை பதுக்கிய இரண்டு வர்த்தகர்கள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இவர்களால் 50 கிலோ கிராம் நிறையுடைய 110 உர மூட்டைகள் பதுக்கப்பட்டிருந்தாகவும் அவற்றைக் கைப்பற்றி, உரிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த நுகர்வோர் அதிகார சபையினர், உரத்தைப் பதுக்கிய வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# ‘ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொரோனாவால் பலி

■ பாலித ஆரியவன்ஸ

பசறை - பிபில வீதியின் 15ஆம் மைல் கல் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

15 நாள்களுக்குள் குறித்த 3 மரணங்களும் ஒரே வீட்டில் பதிவாகியுள்ளன.

இதற்கமைய, 71 வயதுடைய நபரொருவர், நேற்று (15) காலை பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவரின் 21 வயது மகளும் 72 வயது மைத்துனரும் கொரோனா தொற்றால் சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

பத்திர விநியோகம்

# ஊவாவிலும் இடைநிறுத்தம்

■ பாலித ஆரியவன்ஸ

ஊவா மாகாண வாகன வருமான வரிப் பத்திர விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, அக்காலப்பகுதியை நாளை (17) தொடக்கம் அடுத்த மாதம் வரை 16ஆம் திகதி வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதென, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம்.முஸம்மில் தெரிவித்தார்.

கொரோனா தொற்றை கருத்தில்கொண்டு, சுகாதாரப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி, சேவை நிலையங்களுக்கு வருகைத் தரும் பொதுமக்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, நாளை தொடக்கம் ஜூலை மாதம் 16ஆம் திகதி வரை, ஊவா மாகாண பிரதிச் செயலாளர் அலுவலகம் உள்ளிட்ட மாகாணத்தின் சகல பிரதேச செயலகங்கள் ஊடாக வாகன அனுமதிப் பத்திர விநியோகம் அல்லது அதனை அண்மித்த சேவைகள் இடம்பெறாது என்றும் ஊவா மாகாண பிரதான செயலாளர் பி.பீ விஜயரத்ன சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

> **வாகன வருமான வரி காலாவதியாகும் காலப்பகுதிக்கான அபராதத் தொகை அறவிடப்படாதென்றும் முன்பைப் போலவே, இணையவழி ஊடாக வாகன வருமான வரிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது**

எனவே, வாகன வருமான வரி காலாவதியாகும் காலப்பகுதிக்கான அபராதத் தொகை அறவிடப்படாதென்றும் முன்பைப் போலவே, இணையவழி ஊடாக வாகன வருமான வரிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாவது நாளாகவும்

# தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

■ கேதீஸ்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டகொடை மேற்பிரிவு தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக நேற்று (15) மூன்றாவது நாளாகவும் வேலை நிறுத்தத்தை முன்னெடுத்தனர்.

கொழுந்து பறித்தல் உள்ளிட்ட பணிகளில் தோட்ட நிர்வாகம் முறைகேடாக நடந்துகொள்வதாக தொழிலாளர்களால் குற்றஞ்சாட்டப்படும் நிலையில், இந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து, இம்மாதம் 12ஆம் திகதி தலைமை வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர், தோட்டத் தொழிற்சங்கமொன்றின் தலைவர் ஒருவரால் தாக்கப்பட்டார்.

இந்த நிலையில், வெளிக்கள உத்தியோகத்தர் மீதான தாக்குதலை கண்டித்து நேற்று முன்தினம் (14) வெளிக்கள உத்தியோகத்தர்களால் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.



வெளிக்கள உத்தியோகத்தரைத் தாக்கிய தோட்டத் தலைவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், அவருக்கு தோட்ட நிர்வாகம் மீண்டும் தொழில் வழங்க வேண்டுமெனக் கோரியே தொழிலாளர்களால் வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொதித்தெழும்பும் முன்னரே நிவாரணப் பொறிமுறையில் மாற்றம் செய்க

சட்டியொன்றில் பசும்பாலை ஊற்றி, பற்றவைக்காத அடுப்பின் மீது வைத்திருந்தால், எவ்வளவு நேரமிருந்தாலும் அதிலொரு மாற்றம் ஏற்படாது. சில மணிநேரம் கடந்துவிட்டால் அப்பால், பழுதாகிவிடும். ஆனால், அடுப்பில் வைத்த உடனேயே, சூடாக்கினால் கொதித்துப் பொங்கி மெலெழும். இந்தக் 'கொதித்தெழுதலை' சாதாரண நிகழ்வாகப் பார்த்துவிடமுடியாது.

ஒரு பொருளின் மீது, ஏதாவது தாக்கமொன்று செலுத்தப்படும் போதுதான், மாற்றங்கள் ஏற்படும். மனிதர்களின் மீது தாக்கம் அதிகரிக்குமாயின் தானாகவே கொதித்தெழுந்துவிடுவர்; இல்லையேல் ஏனையோர் கொதித்தெழுகையில், பாதிக்கப்பட்டவர்களும் இணைந்து கொள்வர். அந்த நிலைமையொன்று ஏற்படுமாயின், கட்டுக்கடங்காது போகும் நிலைமைகூட, சில நேரங்களில் உருவாகிவிடும். இதற்கு, உலக வரலாற்றில் பல உதாரணங்கள் உள்ளன.

கொரோனா வைரஸ் கட்டுக்கடங்காது போனதன் பின்னரே, கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்ததென்ற குற்றச்சாட்டை யாரும் மறுதழிக்கமுடியாது. தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர், ஒருசில வாரங்களுக்கு நாட்டை முழுமையாக முடக்கியிருந்தால், 'பிலவ வருட கொத்தணி' உருவாகியிருக்காது.

காலங்கடந்த ஞானத்துக்குப் பின்னர், பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அக்கட்டுப்பாடுகள் வாரத்துக்கு ஒருதடவை நீடித்துக்கொண்டே செல்கின்றது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களும், அதனோடிணைந்த பிரதேசங்களும் முடக்கப்பட்டுள்ளன. ஆனால், முடக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவது, பெரும்பாலான இடங்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் ஏனைய பகுதிகளில், சில பிரதேசங்கள் முடக்கப்பட்டிருக்குமாயின் அரசாங்கம் உதவிகளைச் செய்யும். இல்லையேல், தொண்டு நிறுவனங்களும் தனிநபர்களும் உதவிக்கரம் நீட்டியிருக்கின்றனர். மலையகத்தை பொறுத்தமட்டில், ஒரு சில இடங்களைத் தவிர, முடக்கப்பட்ட இடங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டே உள்ளன.

தோட்டங்கள் பல முடக்கப்பட்டன; அருகருகே இருக்கும் தோட்டங்களும் முடக்கப்பட்டன. ஆனால், தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் முறையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் மேலோங்கி நிற்கின்றன. தப்பித் தவறியேனும் நிவாரணம் வழங்கப்பட்டாலும், தோட்டங்களில் வேலை செய்யாத குடும்பங்கள் ஓரங்கட்டப்பட்டன.

மக்களின் மனங்களைக் கவர்வதற்காக, அரசாங்கம் சில அறிவிப்புகளை விடுக்கும். அதிலொன்றுதான் ரூ.5,000 நிவாரணம், அவ்வறிப்பின் பின்னர், சில இடைச்செருகல்கள் செருகப்பட்டன. உதாரணங்கள் பலவிருந்தாலும் சமூர்த்தி நிவாரணமாக மாதாந்தம் ரூ.2,000 பெறுபவர்களுக்கு மிகுதித் தொகையான 3,000 ரூபாயே வழங்கப்படும் என்றனர். ஆனால், முறையான பொறிமுறையொன்று இல்லாமையால், பெரும்பாலான இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களும் நிவாரண உதவிகளும் சென்றடையவில்லை.

பயணக்கட்டுப்பாடு என்பது வார்த்தையளவில் மட்டுமே இருக்கிறது. அஞ்சியிருக்கும் அப்பாவிப் பொதுமக்களுக்கு மட்டுமே கட்டுப்பாடு; ஏனையோர் சுதந்திரமாகச் சுற்றித்திரிகின்றனர். இவையெல்லாம் அரசாங்கத்தின் அடுத்தடுத்த கட்டுப்பாடுகளை கேள்விக்குறியாக்கிவிடும் என்பதே எங்களது மதிப்பீடாகும்.



தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

உங்களுக்கு கஸ்டங்கள், நோய் போன்றவை வந்தால், உங்களைப் போல் துயர் உற்றவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். இறைவனைக் கும்பிடும் மக்கள், பிறர் நலன்கள் பற்றிச் சிந்தித்தாலே போதும், யாதும் சிறப்பாக அமைந்துவிடும்.

ஆணவத்தைக் கோவில்கள், தேவாலயங்கள் போன்ற பொது இடங்களில் காட்டக்கூடாது. ஆனால், எம்மவர்கள் சுயநலத்துடனேயே, தங்களைப் பற்றித் தாங்களே பிரசாரம் செய்கிறார்கள்.

உள்ளம் தெளிவுற வாழ்வதே, பேரானந்தம். நல்லதை ஒருவர் எண்ணும்போதே, அவருக்கு நல்லகாலம் பிறந்துவிடுகின்றது. சொந்தம் என்பதால் சொந்தம் அல்ல; இன்று, எல்லா உறவுகளும் இருந்தாலும், சிலர் தனிமையிலேயே வாழ்கின்றார்கள். சொந்த பந்தங்களுடன் வாழ்வது, அநேகர் மத்தியில் குறைந்து வருகின்றது.

விலகி வாழும்போது, எல்லோரும் அந்நியமாகி விடுகின்றார்கள். இனம், மொழி, கலாசாரப் பண்புகளை வளர்க்க, அனைவரும் ஒன்றுபட வேண்டும். எங்கு வசித்தாலும், எம்மோடு வாழ்ந்த மக்களைத் துறந்து வாழ்வது, நிம்மதியான வாழ்க்கை முறையும் அல்ல!

உலகம் பெரியது; இணைந்தால் அதுவே உங்கள் கைவசம். நேயப்பாடான வாழ்க்கையில், துன்பங்கள் தொலைந்துவிடும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக

# மற்றொரு சர்வதேச பிரேரணை



எம்.எஸ்.எம். ஐயூப்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, இலங்கையின் அரச தலைவர்கள், படை அதிகாரிகளைக் குறி வைத்து, ஒரு பிரேரணையை நிறைவேற்றி, மூன்று மாதங்கள் முடிவடையும் முன்னர், ஐரோப்பிய நாடாளுமன்றமும் இலங்கை அரசாங்கத்தைக் கதி கலங்கச் செய்யும் வகையில், பிரேரணை ஒன்றைக் கடந்த 10 ஆம் திகதி நிறைவேற்றியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் மூலம், போர்க் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள், போர்க் குற்றங்களை விசாரிக்க, அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அந்தந்த நாடுகளிலேயே சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, பேரவையின் உறுப்பு நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலம், இலங்கை அரசாங்கம், சிறுபான்மையினருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பாவிப்பது போன்ற, மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதை நிறுத்தாவிட்டால், இலங்கைக்கு வழங்கப்படும் ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை வாபஸ் பெற வேண்டும் என, ஐரோப்பிய ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஜீ.எஸ்.பி சலுகையானது, இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு, ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் வரிச் சலுகையாகும். இதன் கீழ், மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றாடலைப் பாதுகாத்தல், நல்லாட்சி ஆகிய விடயங்கள் தொடர்பான, 27 சர்வதேச ஒப்பந்தங்களை அமல்செய்யும் நாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வரி அறவிடமாட்டாது.

ஆனால், குறிப்பிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடு, மேல் மத்திய மட்டத்துக்கு, குறைந்த வருமானம் பெறும் நாடு (income level below 'upper middle income') என்று, உலக வங்கி வகைப்படுத்தியிருக்க வேண்டும்.

அத்தோடு, சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் போன்ற ஏனைய திட்டமொன்றின் மூலம், ஐரோப்பிய நாடுகளிடமிருந்து, வேறு சலுகைகளைப் பெறாத நாடாகவும் இருக்க வேண்டும்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சுமார் 7,000 பொருட்களுக்கு, 'ஜீ.எஸ்.பி பிளஸ்' திட்டத்தின் கீழ், பூரண வரிச் சலுகை வழங்கப்படுகிறது. வருடத்துக்கு 2.3 பில்லியன் யூரோ (552 பில்லியன் ரூபாய்) பெறுமதியான பொருட்களை, ஐரோப்பாவுக்கு இலங்கை ஏற்றுமதி செய்கிறது. இதன் மூலம், இலங்கையின் இரண்டாவது பெரும் ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பா இருக்கிறது.

இலங்கை அரசின் வருடாந்த வருமானம், 1,400 பில்லியன் ரூபாயாக இருப்பதால், இந்த ஏற்றுமதி வருமானம் நாட்டுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகையை இழப்பதால், இந்த மொத்த வருமானத்தையும் நாடு இழக்கப் போவதில்லை. ஆனால், அந்தச் சலுகையுடன் வங்காளதேசம், இந்தியா, வியட்நாம், பாகிஸ்தான் போன்ற நாடுகள் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விலை, இலங்கை பொருட்களின் விலையைவிட, ஐரோப்பிய சந்தையில் குறைந்து காணப்படுவதால், இலங்கைப் பொருட்களுக்கான கிராக்கி, வெகுவாகக் குறைந்துவிடும். அதன் மூலம், நாடு பெருமளவில் ஏற்றுமதி வருமானத்தை இழக்க நேரிடும். விற்பனையின் மூலம் வருமானத்தைப் பெற்றாலும், அந்த வருமானத்தால் வரியைச் செலுத்த வேண்டி வரும்.

இந்தப் பிரேரணையானது, இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தின் காரணமாக, இலங்கைக்கு எதிராக, சர்வதேச சமூகம் இந்த வருடம் நிறைவேற்றிய இரண்டாவது பிரேரணையாகும்.

முதலாவது பிரேரணை, கடந்த மாரச் மாதம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில், போர்க் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள், போர் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள, இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எதிராக, பொருளாதாரம் மற்றும் பயணத் தடைகளை விதிக்க வேண்டும் என்றும், சந்தேக நபர்களுக்கு எதிராகத் தத்தமது நாடுகளில் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்றும் அந்தப் பிரேரணையின் மூலம் கூறப்பட்டது.

ஆயினும், இலங்கை அரசாங்கம் அதனை பொருட்படுத்தவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, கவிஞர் அஹ்னாஸ் ஜஸீம் போன்றவர்கள் இன்னமும் வழக்கு விசாரணையின்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போர்க் காலத்தில் கைது செய்யப்பட்டவர்களும், இன்னமும் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். தீவிரவாதத்தைப் பரப்புவதாகச் சந்தேகிக்கப்படுவோரைக் கைது செய்து, வழக்கு விசாரணையின்றி, மறுவாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்க, சட்ட விதிகளை அறிவித்து, கடந்த மார்ச் மாதம், வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதுவும் இன்னமும் அமலில் உள்ளது.

இந்த, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை, மேற்படி வர்த்தமானி அறிவித்தல், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான வேறு சில அறிக்கைகள் ஆகியவற்றையும் நியாயமற்ற தடுத்து வைத்தல் சம்பவங்களையும் சுட்டிக் காட்டியே, ஐரோப்பிய நாடாளுமன்றம் கடந்த 10 திகதியிடப்பட்ட பிரேரணையை நிறைவேற்ற இருக்கிறது.

அத்தோடு, ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைகளைப் பெறும் நாடுகளைப் பற்றிய, ஐரோப்பிய ஆணைக்குழுவின் விசாரணைகளின் முடிவுகளும் இந்தப் பிரேரணைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

பிரேரணையை அடுத்து, நாட்டில் மனித உரிமைகள் நிலைவரத்தைச் சீராக்குவதற்கு, இலங்கை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கப்படும். ஆனால், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் நிபந்தனைகளை, அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்ப்பார்க்க முடியாது.

"வரிச் சலுகைகளுக்காக, நாட்டைக் காட்டிக் கொடுக்க முடியாது" என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவான இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால், திங்கட்கிழமை (14) கூறியதன் மூலம், அது தெரிய வருகிறது.

இரண்டாவது முறையாக, இலங்கை ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைகளை இழக்கப் போகிறது. இன்று போலவே, இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில், 2010ஆம் ஆண்டும் ஐரோப்பிய ஒன்றியம், இலங்கைக்கான ஜீ.எஸ். பி பிளஸ் சலுகைகளை இரத்துச் செய்தது.

அதன் பின்னர், அச்சலுகைகளை வழங்குவதற்காக மனித உரிமைகள் தொடர்பான 15 நிபந்தனைகளை விதித்தது. அவசரகாலச் சட்டத்தை பூரணமாக நீக்குவது, ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பது போன்ற ஜனநாயகத்துக்கான தேவைகள் அவற்றின் மூலம் எடுத்துரைக்கப்பட்டு இருந்தன.

இன்று போலவே அன்றும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம், அந்நிபந்தனைகள் மூலம், நாட்டின் இறைமை பாதிக்கப்படுவதாகக் கூறி, அவற்றை நிராகரித்தது.

அதன் பின்னர், 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க தலைமையிலான அரசாங்கம், அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தத்தின் மூலம், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக அரசியலமைப்புச் சபையையும் சுயாதீன ஆணைக்குழுக்களையும் நிறுவியது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாக, சர்வதேச சட்டங்களுக்கு அமைய பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டமொன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தது; ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைத்தது.

இவற்றின் காரணமாக, 2017ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி, இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைகள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம், 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம், அரசியலமைப்புச் சபையை இரத்துச் செய்து, சுயாதீன ஆணைக்குழுக்களை, ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்கப் போகிறது.

முன்னைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நல்லாட்சிமுறை நடவடிக்கைகளுக்கு முரணாக, தற்போதைய அரசாங்கம் செயற்படுவதாக சர்வதேச மனித உரிமைகள் ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்தப் பின்னணியிலேயே, கடந்த 10ஆம் திகதி, ஐரோப்பிய நாடாளுமன்றம் இந்தப் பிரேரணையை நிறைவேற்றியுள்ளது.

பயங்கரவாதம் தொடர்பாகச் சந்தேகிக்கப்படுவோரைக் கைது செய்வதை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர், குற்றச்சாட்டுகள் இன்றியும் நீதிமன்றங்களின் முன்நிறுத்தப்படாமலும் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதையே சர்வதேச சமூகம் எதிர்க்கிறது. இதை நாட்டின் எதிர்க்கட்சிகளும் விமர்சிக்கின்றன.

இதை அரசாங்கம் தவிர்க்க முடியும். அதனால், நாட்டில் இறைமை எவ்வகையிலும் பாதிக்கப்படாது. எனவே, சற்றுச் சிந்தித்தால் ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அதை விடுத்து, தமது வாக்கு வங்கியைத் திருப்திப்படுத்த, அரசாங்கம் கோடிக் கணக்கான நட்டத்தை அடையப் போகிறது.

அரசாங்கம், ஜீ.எஸ்.பி சலுகைகளைப் பெறுவதற்காக, 27 சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. அவற்றை முறையாக அமுலாக்குவதிலேயே, அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையே முரண்பாடுகள் எழுந்துள்ளன.

அவற்றை அமலாக்குவதன் மூலம், நாட்டின் இறைமை பாதிக்கப்படுமேயானால், அந்த ஒப்பந்தங்களிலிருந்து முற்றாக வெளியேற வேண்டும்.

## கடிதங்கள்

### நுவரெலியாவில்

## மலர்ச் செய்கையாளர் பாதிப்பு

நுவரெலியா மாவட்டத்தில், மரக்கறி செய்கையாளர், வீட்டுத் தோட்ட செய்கையாளர் உள்ளிட்டோருடன் பூக்களை உற்பத்தி செய்வோரும் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாளாந்த வருமானத்தையும் இழந்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த அசாதாரண காலப்பகுதியில், பொது, வீட்டு, கோவில் போன்ற வைபவங்கள் தடைப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில், குறித்த வைபவங்களை நம்பி, தமது ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டு வரும், நுவரெலியா மாவட்ட மலர் செய்கையாளர்கள் சொல்லொன்னாத் துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில், செடியிலிருந்து உரிய காலப்பகுதியில் பூக்களைக் கொய்ய முடியாததால், மழையால் பழுதாகியும் வீணே உதிர்ந்தும் கொட்டும் நிலை உருவாகியுள்ளது.

நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஹக்கலை, மீப்பிலிமான, சாந்திபுர, டொப்பாஸ், பிளக்பூல், லபுக்கலை போன்ற பல பிரதேசங்களில், விலையுயர்ந்த பூக்கள் வளர்ப்பாளர்கள், பூ வர்த்தகர்கள் தமது நாளாந்த வருமானத்தை இழந்துள்ளார்கள்.

அதேநேரத்தில், பூக்கள் வளர்ப்பாளர்களின் வாழ்வாதார பாதிப்புகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில், விவசாயம், சுயத்தொழில் துறை அமைச்சுகள் இவ்விடயம் தொடர்பில் கவனமெடுத்து, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க, நுவரெலியா மாவட்ட செயலகம் முன்வர வேண்டும் என, பூக்கள் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எஸ். கணேசன்

கொல்கத்தா

அரசாங்கம் அலட்சியப்படுத்துகிறது;

# 'விவசாயிகளுக்காக போராடுவேன்'

விவசாயிகளின் நல்வாழ்வுக்காக தொடர்ந்தும் போராடுவேன் எனத் தெரிவித்துள்ள மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, விவசாயிகளை மத்திய அரசாங்கம் அலட்சியப்படுத்துகிறதென குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கூர் நில மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டு சட்டமூலம்-2011 கொண்டு வரப்பட்ட தினத்தை நினைவுகூர்ந்து, மேற்குவங்க முதலமைச்சர் மம்தா, விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்தும் வேளாண் சட்டங்களை எதிர்த்து, டெல்லியில் கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக விவசாயிகள் போராடி வருவது



குறித்தும் பேசியுள்ளார்.

முதலமைச்சர் மம்தா பானர்ஜி தொடர்ந்து கூறியதாவது: விவசாயிகள், சமூகத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். அவர்களின் நல்வாழ்வுக்காக தொடர்ந்து போராடுவேன். விவசாயிகளின் உரிமைகளை நிலைநிறுத்துவதே எனது முன்னுரிமை.

விவசாயிகளுக்காக பத்து ஆண்டுகளுக்கு முன்பு, இதேநாளில் சிங்கூர் நில மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டு சட்டமூலம்- 2011 மேற்குவங்க சட்டசபையில் நீண்ட மற்றும் கடினமான போராட்டத்துக்குப் பிறகு நிறைவேற்றப்பட்டது.

நாங்கள் எங்கள் விவசாயிகளின் உரிமைகளுக்காக ஒற்றுமையாக போராடினோம். இந்தச் சட்டம் அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. இன்று விவசாயிகள் புதிய வேளாண் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் என டெல்லியில் கடந்த 6 மாதத்துக்கும் மேலாக போராடி வருகின்றனர் என்றார்.

சென்னை

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு

## பிரதமரை ஸ்டாலின் நாளை சந்திக்கிறார்



முதலமைச்சர் ஸ்டாலின், நாளை (17) பிரதமர் மோடியைச் சந்திக்கவுள்ளார். ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு முதன்முறையாக புதுடெல்லிக்குச் செல்லும் முதலமைச்சர் ஸ்டாலின், தடுப்பூசி உள்ளிட்ட கோரிக்கைகளை பிரதமரிடம் முன்வைக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தடுப்பூசி, செங்கல்பட்டு தடுப்பூசி மையம், ஒட்சிசன் தேவை, ரெம்டெசிவிர் மருந்து, எழுவர் விடுதலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து, பிரதமருக்கு முதலமைச்சர் என்கிற முறையில் ஸ்டாலின் கடிதம் எழுதினார். சமீபத்தில் மாநிலங்களுக்குத் தடுப்பூசி இலவசம் என அறிவித்ததை வரவேற்றும் கடிதம் எழுதியிருந்தார். முதலமைச்சராக பதவி ஏற்பவர்கள் டெல்லி சென்று பிரதமரைச் சந்திப்பது மரபு.

இந்தியா

பாகூர் கடல்


## மீன் வலையில் சிக்கியது புள்ளிமான்

பாகூர் கடலில் மீனவர்கள் விரித்த வலையில் இறந்த நிலையில் புள்ளிமான் சிக்கிய சம்பவமொன்று புதுச்சேரி, தவளக்குப்பம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மீனவரொருவர், நேற்று அதிகாலை தனது பைபர் படகில், அதே பகுதியை சேர்ந்த 3 பேருடன், மீன் பிடிக்க கடலுக்கு சென்றுள்ளனர்.

நான்கு பேரும் வலையை விரித்து மீன் பிடித்து கொண்டிருந்தனர். அப்போது, புள்ளிமான் ஒன்று இறந்த நிலையில் வலையில் சிக்கியது. இதனால், அதிர்ச்சியடைந்த மீனவர்கள் வலையில் சிக்கிய மானுடன் கரைக்கு திருப்பினர்.

இதுகுறித்து, தவளக்குப்பம் பொலிஸாருக்கும், வனத்துறை, மீன் வளத்துறைக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. வனத்துறை அதிகாரி வஞ்சுளவள்ளியும் அதிகாரிகளும் புதுக்குப்பம் கடற்கரைக்குச் சென்று,



மீன்பிடி வலையில் சிக்கிய மானைப் பார்வையிட்டு, மீனவர்களிடம் விசாரணை நடத்தினர். பின்னர், வனத்துறை அதிகாரிகள், மானை கைப்பற்றி வனத்துறை அலுவலகம் கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்தனர்.

இதுதொடர்பாக, கடலோர பாதுகாப்பு பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாரேனும் மானை கடத்தி கடல் வழியாக கொண்டு சென்றபோது கடலில் விழுந்து உயிரிழந்ததா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை நடந்து வருகிறது.

நாகப்பட்டினம்

பணம்கேட்ட

## காலால் மிதித்து தந்தை கொலை

தனது தந்தையைக் காலால் மிதித்து கொலை செய்த மகனை, நாகை மாவட்ட பொலிஸார் கைது செய்துள்ளனர். ராஜேந்திரன் என்பவரின் மகன் பழனிவேல். பழனிவேலின் மனைவிக்கு நாகை மருத்துவமனையில், ஆண் குழந்தை பிறந்தது.

மருத்துவமனைக்குச் சென்று, மனைவி, குழந்தையை பார்த்து வீடு திரும்பினார் பழனிவேல். அப்போது, அப்பகுதியில் உறவினர் வீட்டுத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மது அருந்தியுள்ளார். அங்கு வந்த ராஜேந்திரன் 2,000 ரூபாய் பணம்கேட்டுள்ளார்.

தகப்பன் மீது கோபமடைந்த மகன்,"பிறந்த பேரனைப் பார்க்க வராத உனக்கு, ஏன் பணம் தர வேண்டும்" எனக் கேட்டு, தகப்பனுடன் மகன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். ஒரு கட்டத்தில், தந்தையை கீழே தள்ளி கழுத்தில் காலை வைத்து அழுத்தியுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் தந்தையின் உயிர் பிரிந்துள்ளது.

சென்னை

## நடிகர் செந்திலின் பெயரில் போலி டுவிட்டர் கணக்கு

### சென்னை பொலிஸ் ஆணையரிடம் புகார்

தமிழக அரசாங்கத்துக்கு எதிராகத் தான் பதிவிட்டதாக போலி டுவிட்டரை உருவாக்கி, அவதூறு பரப்பும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி நடிகர் செந்தில், சென்னை பொலிஸ் ஆணையரிடம் அளித்த புகாரின்பேரில் உடனடியாக டுவிட்டர் கணக்கு நீக்கப்பட்டது. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகைச்சுவை நடிகர் செந்தில், ஜெயலலிதா காலத்தில் அ.தி.மு.கவில் இருந்தார். ஜெயலலிதா மறைவுக்குப் பின், டி.டி.வி தினகரன் தலைமையை ஏற்று அ.ம.மு.கவுக்குத் தாவினார். சமீபத்தில் தேர்தலுக்கு முன்



பா.ஜ.கவில் இணைந்தார்.

தி.மு.க ஆட்சி அமைந்துள்ள நிலையில், ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. அதில் மதுக்கடைகளைத் திறக்க முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டார். அதை நடிகர் செந்தில் கண்டித்ததாக செய்தி பரவியது.

மக்கள் உயிரைக் காக்க வேண்டிய நேரத்தில் மதுக்கடை அவசியமா? என்று கேட்டு செந்தில் டுவிட்டரில் பதிவிட்டிருந்ததாக போலி டுவிட்டரில் செய்தி வெளியாகியிருந்தது.

ஆக்ரா

ஆழ்துளைக் கிணற்றில் சிறுவன்;

## எட்டுமணி நேர முயற்சியில் பலன்

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ரா அருகே 130 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில் விழுந்த மூன்றரை வயது சிறுவன், எட்டு மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் மீட்கப்பட்டான்.

ஆக்ரா அருகேயுள்ள தரியாய் கிராமத்தில் சோட்டேலால் என்பவர் மகன் நேற்றுக் காலை, வீட்டு வாசலில் விளையாடினான். அருகில் இருந்த 130 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில்



தவறி விழுந்துள்ளான். உடனடியாக இராணுவம், மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புப்படை வீரர்களுக்கு அறிவித்தவுடன் விரைந்து வந்து மீட்புப் பணியைத் ஆரம்பித்தனர்.

எட்டு மணி நேர போராட்டத்துக்குப் பின்னர், மாலையில் சிறுவன் உயிருடன் மீட்கப்பட்டான். சிறுவனின் தந்தை சோட்டேலால் கூறுகையில், ''நான் மிகுந்த அதிர்ஷ்டசாலி. என் குழந்தையை மீண்டும் உயிருடன் பார்த்து விட்டேன். குழந்தையை மீட்டுக் கொடுத்த அனைவருக்கும் நன்றி'' என்றார்.





## அக்கராயனில் 70 குடும்பங்களுக்கு நிவாரண உதவி

கிளிநொச்சி, அக்கராயன், கண்ணகைபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்வாதாரத்தை இழந்திருக்கும் 70 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. அக்கராயன் மகா வித்தியாலயத்தில் 2001ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) வகுப்பில் கல்வி கற்றவர்களால், 70 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நடராசா கிருஸ்ணகுமார்







## மல்வத்தை பிரதேச விதவைகளுக்கு 150 உலருணவு பொதிகள்

அம்பாறை, மல்வத்தைப் பிரதேசத்தில் வாழ்வாதாரத்தை இழந்த விதவைகளுக்கு உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட தாயக உறவுகளின் பசியைப்போக்க, கனடாவில் வாழ்ந்துவரும் மனோகரன் சுப்பிரமணியம், தனது பிறந்தநாள் பரிசாக வழங்கிய 10 இலட்ச ரூபாயில் 500 குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் பெறுமதியான 500 உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அதற்கிணங்க, மல்வத்தைப் பிரதேசத்திலுள்ள மல்லிகைத்தீவு, திருவள்ளுவர்புரம், கணபதிபுரம், புதுநகர் கிராமங்களைச் சேர்ந்த விதவைகளுக்கு காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலினால் 150 உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

வி.ரி. சகாதேவராஜா






## மாற்றுத்திறனாளிகளுக்கு 'சிகரம்' உதவி

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு, உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக சிகரம் அமைப்பின் தலைவர் எஸ்.ஐ. தௌபீக் சஹ்வி தெரிவித்தார். இந்த உதவியைப் புரிந்த மட்டக்களப்பு மைக்கல்ஸ் 2010 பழைய மாணவர் சங்கத்துக்கு நன்றிகளை தெரிவிப்பதாக சிகரம் அமைப்பு தெரிவித்தது.

எச்.எம்.எம். பர்ஸான்





## கௌதாரிமுனையில் 132 குடும்பங்களுக்கு உலருணவு





பூநகரி, கௌதாரிமுனை கிராம அலுவலர் பிரிவில் வசிக்கின்ற 132 குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையால் வழங்கி வைக்கப்பட்டன. கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவர் டொக்டர் த. சத்தியமூர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்க, கனடா ஈகை அமைப்பின் நிதி பங்களிப்புடன் இவ்வுதவித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வி வளர்ச்சி அறக்கட்டளை, கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகம் ஆகியன இணைந்து முன்னெடுத்த இச்செயற்றிட்டத்தின் போது, கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் உப தலைவர் அதிபர் அ. பங்கையற்செல்வன், பல் வைத்திய நிபுணர் மா. தவராஜா, றோட்டறிக் கழக உறுப்பினர்கள், பூநகரி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச குடும்ப நல மாதுகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மு. தமிழ்ச்செல்வன்











## '49+ அமைப்பு' 100 குடும்பங்களுக்கு உலர் உணவு

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவரின் '49+ அமைப்பு', நன்கு இணங்காணப்பட்ட 100 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தது.

35 வருடங்களுக்கு முன்பாக, புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களை ஒன்று சேர்த்து உருவாக்கிய '49+' அமைப்பில், 120 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ளார்கள்.

எம்.யூ.எம். சனூன்



ஈரான்

தடைகள் நீக்கம்:

# ‘ஐ. அமெரிக்காவுடன் பரந்தளவிலான இணக்கம்’

சக்தி உள்ளடங்கலாக, ஈரானின் தொழிற்துறை பகுதிகள் மீதான தடைகளை நீக்குவது தொடர்பில், ஐக்கிய அமெரிக்காவுடன் பரந்தளவிலான ஒப்பந்தம் ஒன்றை அடைந்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

எனினும், 2015ஆம் ஆண்டு அணு ஒப்பந்தத்தை மீளக் கொண்டு வருவதற்கு மிகக் குறுகிய காலமே



உள்ளதாக ஈரான் எச்சரித்துள்ளது.

இந்நிலையில், மேலதிக விடயங்கள் எவையையும் ஈரான் வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் சயீட் கஹடிப்ஸடெஹ் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

இதேவேளை, இன்னும் சில விடயங்கள் தடைக்கல்லாகவுள்ளதால் ஒப்பந்தமானது தாமதமாவதாக செய்தியாளர்களிடம் கஹடிப்ஸடெஹ் கூறியுள்ளார்.

ஐ. அமெரிக்கா

அணுவாயுதங்களின் எண்ணிக்கை குறைந்தபோதும்

## ‘பெரும்பாலானவை ஏவலுக்கு தயாரான நிலையில்’



கையிருப்பில் உள்ள ஒட்டுமொத்த அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை உலக அணுசக்தி நாடுகள் கடந்தாண்டு குறைத்தபோதும், இவற்றில் பெரும்பாலானவை குறுகிய காலத்தில் ஏவுதலுக்கு தயாராகவுள்ளதாக அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வட கொரியா ஆகிய ஒன்பது நாடுகளால் இவ்வாண்டு ஆரம்பத்தில் ஏறத்தாழ 13,080 அணுவாயுதங்கள் கையிருப்பில் காணப்பட்டிருந்ததாக ஸ்டொக்ஹொல்ம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. கடந்தாண்டு ஆரம்பத்திலிருந்த 13,400 என்ற என்ற எண்ணிக்கையிலிருந்து இது குறைவடைந்துள்ளது.



## தீ...

ஐக்கிய அமெரிக்காவின் இலியனோஸின் றொக்டனில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் காலையில் ஏற்பட்ட தீயானது சில நாள்களுக்கு எரிந்து முடியாது என உள்ளூர் தீயணைப்புப் படைத் தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யேமன்



## 25 அகதிகளின் சடலங்கள் மீட்பு

யேமன் கரையோரத்தில் 25 அகதிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 200 பேர் வரையானோரைக் கொண்டதாகக் கருதப்படும் அகதிகளின் படகு மூழ்கியதை அடுத்தே சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக லஹிஜ் மாகாண அதிகார சபையின் ஜலில் அஹ்மட் அலி தெரிவித்துள்ளார்.




அவுஸ்திரேலியா

## இலங்கை அகதி குடும்பத்தை விடுவித்தது

கடந்த 2019ஆம் ஆண்டு முதல் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிக் குடும்பம் ஒன்றை அவுஸ்திரேலியாவில் சமூகத் தடுப்பில் வாழ அவுஸ்திரேலியா அனுமதிக்கவுள்ளது.

குறித்த குடும்பத்தின் இளைய மகள் நோய்வாய்ப்பட்டுள்ள நிலையிலும், பிரதான வைத்தியாலை ஒன்றுக்கு சென்றுள்ள நிலையிலும் குடும்பத்தை பிரித்து வைத்தது பொதுமக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்திய நிலையிலேயே இவ்வாறு அவுஸ்திரேலியா செய்யவுள்ளது.

எவ்வாறெனினும், இக்குடும்பத்தில் நீண்ட எதிர்காலம் குறித்து தெளிவில்லாமல் உள்ளதுடன், இந்நடவடிக்கை தற்காலிகம் என்றே கூறப்பட்டுள்ளது.

சீனா

தென் சீனக் கடலுக்குள்

## ஐ. அமெரிக்க கப்பல் இயக்கம்

யு.எஸ்.எஸ் றொனால்ட் றீகனால் தலைமை தாங்கப்படும் ஐக்கிய அமெரிக்க விமானந் தாங்கிக் குழு ஒன்றானது, வழமையான நடவடிக்கை ஒன்றின் அங்கமாக தென் சீனக் கடலுக்குள் நுழைந்துள்ளதாக, ஐக்கிய அமெரிக்க கடற்படை நேற்றுத் தெரிவித்துள்ளது.

தென் சீனக் கடலில் உள்ளபோது பறக்கும் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக தாக்குதல் குழுவானது கடற் பாதுகாப்பு நடவடிக்கைகை மேற்கொள்ளும் என கடற்படை மேலும் கூறியுள்ளது.



கோப்பா அமெரிக்கா தொடர்:

# சமநிலையில் ஆர்ஜென்டினா - சிலி போட்டி

பிரேஸிலில் நடைபெற்று வரும் கோப்பா அமெரிக்கா தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற ஆர்ஜென்டினா, சிலிக்கு இடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஆர்ஜென்டினா சார்பாகப் பெறப்பட்ட கோலை லியனல் மெஸ்ஸி பெற்றதோடு, சிலி சார்பாகப் பெறப்பட்ட கோலை எடுவார்டோ வர்காஸ் பெற்றிருந்தார்.

இந்நிலையில், பொலிவியாவுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் பராகுவே வென்றது. பராகுவே சார்பாக,



ஏஞ்செல் றொமெறோ இரண்டு கோல்களையும், அலெஜான்ட்ரோ றொமெறோ ஒரு கோலையும் பெற்றனர். பொலிவியா சார்பாகப் பெறப்பட்ட கோலை என்வின் சாவெட்ரா பெற்றிருந்தார்.



## பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து வெளியேறும் நவாஸ்?

பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் கோல் காப்பாளரான கெய்லர் நவாஸ், அக்கழகத்தை விட்டு வெளியேறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனின் கோல் காப்பாளர் ஜல்லூயிஜி டொன்னருமா பரிஸ் ஸா ஜெர்மைனில் இணைவார் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையிலேயே மேற்குறித்த விடயமும் எதிர்பார்க்கப்படுகிறது.

34 வயதான நவாஸைக் கைச்சாத்திட இன்னொரு சீரி ஏ கழகமான ஜுவென்டஸ், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட், ஏ.சி மிலன் ஆகியன ஆர்வம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பரிஸ் ஸா ஜெர்மைனுடன் இன்னும் மூன்றாண்டு ஒப்பந்தத்தை நவாஸ் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜுவென்டஸிலிருந்து வெளியேறும் கிறிஸ்டியானோ றொனால்டோ?



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்களவீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ, அக்கழகத்தில் அடுத்தாண்டிலும் தொடர்வாரா என்பது சந்தேகமாகவுள்ளது.

ஏனெனில், ஜுவென்டஸுடன் அடுத்தாண்டு வரையிலும் றொனால்டோ ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்றபோதும், ஜுவென்டஸிலிருந்து வெளியேறுவதை மீண்டும் ஒரு முறை அவர் நேற்று முன்தினம் மறுத்திருக்கவில்லை.

றொனால்டோவை விற்பதன் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ள ஜுவென்டஸ் எதிர்பார்க்கையில், தனது முன்னாள் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுக்கு றொனால்டோ செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## றியல் மட்றிட்டிலிருந்து விலகும் வரான்?




ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டில் இருந்து பின்களவீரரான ரஃபேல் வரான் விலகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் ஆகியன 28 வயதான வரானைக் கைச்சாத்திட ஆர்வம் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பரிஸ் ஸா ஜெர்மைனுக்குச் செல்வதையே வரான் விரும்புகையில், அவரை பரிஸ் ஸா ஜெர்மைன் கைச்சாத்திடுவதற்கு 60 மில்லியன் யூரோக்கள் அளவில் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யூரோ கிண்ணத் தொடர்:

## சமநிலையில் ஸ்பெய்ன் - சுவீடன் போட்டி

யூரோ கிண்ணத் தொடரில், ஸ்பெய்னில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், சுவீடனுக்கும் இடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிலையில், ரஷ்யாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போலந்துடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஸ்லோவாக்கியா வென்றது. ஸ்லோவாக்கியா சார்பாக, மிலான் ஸ்கிறினியர் ஒரு கோலைப் பெற்றதுடன், மற்றைய கோல் ஒவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. போலந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை கரோல் லினெட்டி பெற்றிருந்தார்.

இதேவேளை, ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், செக் குடியரசுக்கும் இடையிலான போட்டியில், 2-0 என்ற கோல் கணக்கில் செக் குடியரசு வென்றது. செக் குடியரசு சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் பற்றிக் ஸ்சிச் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 16 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.